பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரின் (வளர்ச்சி) செயல்முறைகள்
முன்னிலை: திரு.ச.ஸ்ரீராம்.

0916 | 01 | 20

ந.க.எண்.618/2019/பஅ2 நாள்: 16.03.2020

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
16 MAR 2020
பெரம்பலூர்

பொருள்: பணியமைப்பு - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - பெரம்பலூர் மாவட்டம் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெற்ற தொகுதி-IV - தேர்வில் தெரிவு செய்யப்பட்டவர்களுள் 4 நபர்களின் பெயர்கள் கொண்ட பட்டியல் பெரம்பலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்து வரப்பெற்றது - பணிநியமனம் செய்யப்பட்ட 4 நபர்கள் பணியில் சேர்ந்துள்ளனர் - பணியில் சேர்ந்த நாள் முதல் இளநிலை உதவியாளர் நிலையில் பணியை வரன்முறை செய்து உத்தரவிடுதல்.

பார்வை:

1. சென்னை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளரின் கடிதம் எண்.899/PSD-C3/2019, நாள்: 18.02.2019
2. பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறைகள் ந.க.எண்.918/2019-1,2,3&4/பஅ2, நாள்: 25.02.2019
3. ஆலத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலரின் (வ.ஊ) கடிதம் ந.க.எண்.366/2019/அ1, நாள்: 04.10.2019
4. வேப்பந்தட்டை வட்டார வளர்ச்சி அலுவலரின் (வ.ஊ) கடிதம் ந.க.எண்.3690/2019/அ1, நாள்: 11.10.2019
5. பெரம்பலூர் வட்டார வளர்ச்சி அலுவலரின் (வ.ஊ) கடிதம் ந.க.எண்.515/2019/அ1, நாள்: 25.02.2020

------

உத்தரவு:

2015-2016, 2016-2017, 2017-2018 மற்றும் 2017-18 ஆண்டுக்கான தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளர் உள்ளிட்ட பதவிக்கு நேரடி தெரிவின் மூலம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி-IV தேர்வு நடத்தப்பெற்று பெரம்பலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகிற்கு தெரிவு செய்யப்பட்ட நான்கு நபர்களின் பெயர்கள் கொண்ட பட்டியல் பார்வை 1-இல் காணும் கடிதத்துடன் வரப்பெற்றதைத் தொடர்ந்து, பார்வை 2-இல் காணும் செயல்முறைகளின்படி நான்கு நபர்களுக்கும் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகள் மற்றும் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி விதிகள் - விதி 10a(i) ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள நெறிமுறைகளுக்கிணங்க, முற்றிலும் தற்காலிகமாக இளநிலை உதவியாளர்-ஆக பணி நியமனம் செய்தும், பணிவாய்ப்பு அளித்தும் பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவரால் உத்தரவிடப்பட்ட 4 நபர்கள் பணியில் சேர்ந்து நாளது வரை பணிபுரிந்து வருகின்றனர்.

0100 இந்நிலையில், இளநிலை உதவியாளர் நிலையில் முறையாக பணியில் சேர்ந்த நாள் முதல் இவர்களின் பணியை வரன்முறை செய்திட பரிசீலித்திடும் பொருட்டு, தொடர்புடைய அலுவலகத் தலைவர்களிடமிருந்து கருத்துருக்களை பெற்று கவனமாக பரிசீலிக்கப்பட்டது. இளநிலை உதவியாளர் பணி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளை இவர்கள் முழுமையாக பெற்றுள்ளனர். பணியில் சேர்ந்த நாள் முதல் நாளது வரை இவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, பின்வரும் அட்டவணையில் கலம் எண். 2-இல் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்களின் பொருட்டு, கலம் எண்.4-இல் குறிப்பிடப்பட்டுள்ள நாள் முதல் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு இளநிலை உதவியாளர் நிலையில் அவர்களது பணியை வரன்முறை செய்து இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

"The regularization is subject to the outcome of the WPs (if any) pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Group –IV Services /2015-2016 recruitment."

| வ. எண் | பணியாளரின் பெயர் (திருவாளர்கள்) | தற்பொழுது பணிபுரியும் பதவி மற்றும் அலுவலகம | இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | மு.இளஞ்சியம் | இளநிலை உதவியாளர், உதவி இயக்குநர் (ஊராட்சிகள் மற்றும் தணிக்கை) அலுவலகம், பெரம்பலூர். | 28.02.2019 முற்பகல் |
| 2 | ந.லாவண்யா | ஊர்நல அலுவலர் நிலை - II, ஊராட்சி ஒன்றியம், வேப்பந்தட்டை | 01.03.2019 முற்பகல |
| 3 | ஆ.அருள் | இளநிலை உதவியாளர், ஊராட்சி ஒன்றியம், பெரம்பலூர். | 28.02.2019 முற்பகல் |
| 4 | மு.பிரபு | இளநிலை உதவியாளர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, பெரம்பலூர். | 28.02.2019 முற்பகல் |

ந.க.அ1/01/2020, நாள்: .03.2020

நகல் சார்வு செய்யப்பட்டது

பெறுநர்:
திரு.மு.பிரபு,
இளநிலை உதவியாளர்,
மா.ஊ.வ.முகமை,
பெரம்பலூர்.

திட்ட இயக்குநர்
மா.ஊ.வ.மு. பெரம்பலூர்.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி),
பெரம்பலூர்.

பெறுநர்
தொடர்புடைய பணியாளர்கள் - உரிய வழியாக.

நகல்: திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, பெரம்பலூர்.
நகல்: உதவி இயக்குநர் (ஊராட்சிகள் மற்றும் தணிக்கை), பெரம்பலூர்.
நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வஊ/ கிஊ), பெரம்பலூர்/வேப்பந்தட்டை.
நகல்: பஅ3 - பிரிவு / பஅ2 - இருப்பு கோப்பிற்கு.

2/2